ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பிராம்மணனாகப் பிறந்தவன் பால்யம் முதற்கொண்டே பரிசுத்தமான ஆஹாரங்களையே அருந்தவேண்டும். அப்படியானால் ஆஹாரசாரத்தின் பரிணாமமான அந்தக்கரணம் சுத்தமாயிருக்கும். அசுத்த ஆஹாரங்களை உட்கொண்டால்மனதும் அசுத்தமாய்விடும். அதனால்ஆஹாரத்தில் நியமம் வேண்டுவதவசியம், விலைக்கு வாங்கின அன்னத்தைப் புசிக்கலாகாது. பலரும் காணப் புசிக்கலாகாது.

கேள்வி:—அப்படியானால் தூரதேசத்திற்கு ரயிலில்செல்லுபவர்கள் இந்த நியமத்தை எப்படி அங்கீகரிக்கமுடியும்? அதிலும் அடிக்கடி ரயில் பிரயாணம் செய்கின்றவர் போஜன நியமத்தை நாடுவதெப்படி? பசியால் வருந்தும்பொழுது அங்கு விற்கப்படுகின்ற ஸாம்பார் சாதத்தைத்தான் வாங்கிச் சாப்பிடவேண்டியதாகிறது.

பதில்:—புண்ணிய கர்மங்களைச்செய்ய அதிகாரம் பெற்றவன் ரயிலில் சென்று ஸாதிக்கக்கூடிய புண்ணிய கார்யங்கள் சாஸ்திரங்களில் விதிக்கப்படவில்லை. தீர்த்தயாத்திரை முதலிய புனிதகார்யங்கள் ரயிலில் போய்செய்யவேண்டியவைகளல்ல. தீர்த்தயாத்திரையை விதித்தவிடத்தில் வாஹனாதிகளில் போகும்படியாகக் கூறப்படவில்லை, புண்ணியத்திற்காகத் தீர்த்தயாத்திரையா? பாபத்திற்காகவா? ஸந்தியாகாலங்களில் செய்யவேண்டிய ஸந்தியோபாஸனாதிகளைச் செய்யாமலும், கண்டதை வாங்கித்தின்றுகொண்டும்போவதால் புண்ணியலேசமும் கிடைக்காது. பாபமே நேரும். அந்த யாத்திரை செய்வதைவிட செய்யாமலிருப்பதே நன்று.

கேள்வி:—வேறுகார்யங்களுக்குப் போகவேண்டி இருந்தால் என்ன செய்வது?

பதில்:—பிராமணப் பிறவியை அடைந்தவன் தன் வர்ணாசிரம தர்மத்தை ஒரே இடத்தில் நிலையாயிருந்து செய்யவேண்டியதைத்தவிர ஓடிஆடித் திரியும்படியான வேறு கார்யங்கள் அவனுக்கு விதிக்கப்படவில்லையே. வேறுகார்யத்தில் எதற்காகப் போகிறான்?

கேள்வி:—தேசக்ஷேமத்திற்காகப் போகவேண்டியதாகின்றதே.

பதில்:—இந்த தேசக்ஷேமத்திற்காக பாபத்தைச்செய்து புனிதமானப் பிறவியைப் பாழாகச் செய்யலாமா? தேசக்ஷேமத்திற்காகவென்று தீய தொழிலைச் செய்துவிட்டால் தேசக்ஷேமம் கண்டிப்பாய்க் கிடைத்துவிடுமென்று கூறமுடியுமா? ஒருவாறு கிடைத்துவிடுவதானாலும் பரலோகத்திற்பெறவேண்டிய புண்ணியபலன்கள் தடைபட்டுவிடுமே. அற்பத்திற்காக பெரியபயனை இழந்துவிடலாமா? பாபத்தைச் செய்துதானா தேசக்ஷேமத்தை எதிர்பார்க்கவேண்டும். புண்ணியத்தைச்செய்து இஹபரக்ஷேமங்களை அடையக்கூடாதா? புண்ணியம்செய்துகிடைத்த தேசக்ஷேமம் தேசக்ஷேமமாகாதோ? புண்ணியத்தையே செய்துவந்தநம் முன்னோர் தேசக்ஷேமமில்லாமலா இருந்தார்கள். தேசக்ஷேமமென்று வியாஜத்தை வைத்துக்கொண்டு துராசாரத்தைச் செய்யத் துணிந்துவிடக்கூடாது. ஸதாசாரத்தையே செய்து ஸகலக்ஷேமத்தையும் அடைவார்களாக.

பத்திராதிபர்.

# ஆத்துமகுணங்கள்.

## 8. ஆயாஸமில்லாமை.

ஆசையில்லாமையென்பது எட்டாவது ஆத்மகுணமாம். அதன் ஸ்வரூபத்தை

यथोत्पन्नैस्तु संतोषः कर्तव्यः स्वार्जितै र्धनैः ।
परार्थे नाभिलाषेत साऽस्पृहा परिकीर्तिता ॥

"ஒழுங்கானவழியில் தன்னால் ஸம்பாதிக்கப்பட்டுக் கிடைத்த பொருளைக்கொண்டு ஸந்தோஷப்படுவதும் பிறர்பொருளை விரும்பாமலிருப்பதும் ஆசையில்லாமை எனப்படும்" என்று பிருஹஸ்பதிபகவான் கூறியுள்ளார். ஆசையை அடியோடு ஒழிப்பதே மிகச் சிறந்ததெனச் சுருதி கருதியிருந்தாலும் மனிதர்களால் அதிலும் கிரஹஸ்தர்களால் அப்படியிருக்கமுடியாது. அவர்களது ஆச்ரமத்துக்குறிய காரியங்களுக்குச் சாதனமான பொருளைச் சம்பாதிக்க அவர்கள் ஆசைப்படாமலிருக்க முடியாது. இந்த வியாஜத்தைக் கொண்டு முற்றிலும் ஆசைக்கே வசப்பட்டிருப்பது தகாதகாரியம், ஆசைக்கடிமையாகிவிட்டால் அகில உலகுக்கும் அடிமையானதாகவேயாகும். இக்கருத்தை

आशाया दासा ये दासा स्ते सर्वलोकस्य ।

"ஆசைக்கு எவர்கள் தாஸர்களோ அவர்கள் ஸர்வ ஜனத்திற்கும் தாஸராவார்கள்" என்று நீதிநூலும் நன்குபதேசிக்கின்றது. ஆகவே அடிமையாயிருப்பவன் சுதந்தரமாய் ஒருகாரியத்தையும் செய்யமுடியாது. ஒருபயனையும் அடையமுடியாது. அதனால் ஆசையைக் கொஞ்சம்கொஞ்சமாக அடக்கி முடிவில் அது தன் வசப்பட்டிருக்கும்படி செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு ஆசையை அடக்கி வசப்படுத்திக்கொண்ட மஹானுபாவனுக்கு ஜகமெல்லாம் அடிமையாகும். இக்கருத்தை

आशा दासी येषां तेषां दासायते लोकः ॥

"ஆசை எவர்களுக்கு தாஸியாகின்றதோ அவர்களுக்கு உலகமே அடிமையாகும்" என்று நீதிநூல் விளக்குகின்றது. கிரஹஸ்தாச்ரமத்திலிருந்து அதற்குறிய ஔபாஸனாக்னி ஹோத்திராதி கர்மங்களைச்செய்ய சிரத்தையடைந்தவன் தனது கர்மாவுக்குப் பொருள் வேண்டியிருக்கிறதேயென்று பிறர்பொருளை நியாய மற்றவழியில் அடைய ஆசைப்படக்கூடாது, அந்த விஷயத்தில் ஆசையைக் கண்டிப்பாய் நிக்ரஹிக்கவேண்டும். பொருளைச் சம்பாதிக்க அவரவர்களுக்குத் தக்கவாறு பல உபாயங்கள் சாஸ்திரங்களில் போதிக்கப்படுகின்றன. அவற்றுள் எல்லாவற்றையுமோ ஒன்றிரண்டையோ, அல்லது ஏதாவதொன்றையோ, ஆச்ரயித்து சம்பாதிக்க முயலவேண்டும். அதில் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷப்படவேண்டும், அற்பமாகக் கிடைத்தாலும் அதிகமாகக் கிடைத்தாலும் இவ்வளவுதான் நமக்குக் கிடைக்கவேண்டிய பாக்கியமென்று பாவித்து ஸந்தோஷப்படவேண்டும். பிறர் பொருளைக்கண்டு அஸூயைப்படக்கூடாது. இப்படி பேராசையையடக்கிக்கொண்டு உசிதமாக ஆசைகொள்வதே கிரஹஸ்தர் விஷயத்தில் ஆசையில்லாமையென்று சொல்லப்பட்டது. ஸந்நியாஸிவிஷயத்திலானால் அவித்தையென்னும் அடிப்படையோடு ஆசையொழிப்பதே ஆசையில்லாமையாகும். இந்தமேலான குணத்தை ஆச்ரயித்து எல்லோரும் மேன்மையடையவேண்டும். இவ்விதமாக தயைமுதல் ஆசையில்லாமை என்பதுவரை கூறப்பட்ட எட்டு ஆத்மகுணங்களையும், முன்னுள்ள நாற்பது ஸம்ஸ்காரங்களையும், பெற்றவன் பிரும்மஸாயுஜ்யத்தையடைவான். அங்ஙனமே சங்கர்:—

संस्कारैः संस्कृतः पूर्वै रुत्तरैरपि संस्कृतः ।
नित्यमष्टगुणैर्युक्तो ब्राह्मणो ब्राह्मलौकिकम् ।
ब्राह्मं पदमवाप्नोति यस्मान्न च्यवते पुनः ॥

"முந்திய ஸம்ஸ்காரங்களாலும்பிந்திய ஸம்ஸ்காரங்களாலும் ஸம்ஸ்கரிக்கப்பட்டு எட்டு ஆத்மகுணங்களோடுங்கூடினவனாயிருந்தால் பிரம்மலோகத்தில் பிரம்மஸாயுஜ்யத்தை அடைவான். அங்கிருந்து நழுவமாட்டான்" என்று கூறினர். கர்ப்பாதானம் முதல் முந்திய ஸம்ஸ்காரங்களாம். பாகயக்ஞம் முதலியன பிந்திய ஸம்ஸ்காரங்

அங்ஙனமே ஹாரீதர்—

द्विविध एव संस्कारो भवति ब्राह्मो दैवश्च । गर्भाधानादि समावर्त्तनांतो ब्राह्मः । पाकयज्ञ हविर्यज्ञ सौम्याश्चेति दैवः । ब्राह्मेण संस्कारेण संस्कृतऋषीणां समानतां सायुज्यं गच्छति । दैवेनोत्तरेण संस्कृतो देवानां समानतां सलोकतां सायुज्यं गच्छति ॥

"சாரீரமான 40-ஸம்ஸ்காரங்கள் பிராம்மமென்றும் தைவமென்றும் இருவகைப்படும். கர்ப்பாதானம் முதல் விவாகம் வரையுள்ள 19-ஸம்ஸ்காரங்கள் பிராம்மங்கள், இவைகளால் ஸம்ஸ்கரிக்கப்பட்டவன் ரிஷிகளின் ஸாம்யத்தையும் ஸாயுஜ்யத்தையுமடைவான். பாகயக்ஞம் 7. ஹவிர்யக்ஞம் 7 ஸோமயக்ஞம் 7 ஆக 21ம் தைவ ஸம்ஸ்காரங்கள். இவைகளால் ஸம்ஸ்கரிக்கப்பட்டவன் தேவர்களின் லோகத்தையும், ஸாம்யத்தையும், ஸாயுஜ்யத்தையும், கர்மங்களின் பலாபலத்திற்குத்தக்கவாறு அடைவான்" என்று கூறுகின்றார். ஆத்மகுணமில்லாதவர்களுக்கு இந்தப்பயன் ஆத்மகுணங்களெட்டும், நாற்பது ஸம்ஸ்காரங்களோடு சேர்ந்துவிட்டால் கீழ்க்கூறப்பட்ட பிரம்ம ஸாயுஜ்யமே பயனும். ஆகையால் எல்லா த்விஜாதிகளும் எல்லா ஸம்ஸ்காரங்களேயும்பெற்று சுத்தர்களாகி சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# வரப்போகும் வருஷப் பெயர்.

இவ்விஷயமாய் கொட்டாரக்கரை ப்ரம்மஸ்ரீ K. V. வீரமணி வாத்தியாரவர்கள் சென்றவார ஸஞ்சிகையில் ஸந்தேஹப்பட்டு அதற்கோர் ஸமாதானத்தை வெளியிடவேண்டுமென ஹரிஹர பக்தசமூகம் கேட்டுக்கொள்வதாகப் பிரசுரித்திருக்கிறார்கள். அது விஷயமாக மூலக்கிரந்தங்களில் கூறப்பட்ட அறுபதுவருஷப் பெயர்களேப்பார்த்தால் தற்போதுசிலர் வழங்கிவருவதற்கு மாறுதலாகக் காணப்படுகின்றன. மூலக்கிரந்தங்களில் கூறப்படுவது சரியா? வழங்கப்படுவது சரியா? என்றுவிசாரம் செய்வோமானல் மூலப்பிரமாணங்களுக்கு விரோதப்பட்டு வழங்கப்படுவதைத்தான் மாற்றவேண்டுமேயன்றி வழங்கப்படுவதை வைத்துக்கொண்டு மூலப்பிரமாண வசனங்களே மாற்றுவதோ விடுவதோ யுக்தமா

காது. சுருதிகளில் வருஷப்பேர்கள் வரிசையாகக் கூறப்படுவதாக ப்ரத்தியக்ஷசாகைகளில் காணுவிடினும் வேதாங்கமாகிய சோதிடநூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. பலநூல்களிலும் ஓரே விதமாகவே கூறப்படுவதால் "கதிஸாமான்ய" நியாயப்படி அவைகளே முக்கியப் பிரமாணங்களெனக் கொள்ளவேண்டும். அவைகளாவன—நாரத ஸம்ஹிதையில்—

प्रमोदाब्दे प्रमोदन्ते तथापि निखिला जनाः ।
क्लेशान्न क चिन्नमोक्ष्यन्ते स्वजनानामनामयः ॥
एवं वै मोदते लोकः प्रजापतिशरद्यतः ।

"பிரமோத வருஷத்தில் ஸகல ஜனங்களும் ஆனந்தப்படுவார்கள். ஆயினும் சிலவிடங்களில் கிலேசப்படாமலிருக்கமாட்டார்கள். தன்னினத்தாருக்கு ஆரோக்கியமுண்டு. இதுபோலவே பிரஜாபதி வருஷத்திலும் உலகம் மகிழ்ச்சியடையும்" என்று கூறப்படுகின்றது. கார்க்கியஸம்ஹிதையில்—

प्रभवो विभवश्चैव प्रमोदोऽथ प्रजापतिः ।

என்று வரப்போகிற வருஷத்தின்பெயர் பிரஜாபதியென்றே குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வசனம் நிர்ணய ஸிந்துவில் எடுக்கப்பட்டிருக்கிறது. தைவக்ஞ விலாசத்திலுமிதேவசனம் காணப்படுகிறது. மஹாகவி ஸ்ரீகாளிதாஸர் இயற்றிய ஜ்யோதிர்விதாபாணத்தில்

प्रभवो विभवश्शुक्लः प्रमोदाख्यः प्रजापतिः ।

என்று கூறப்பட்டது. பிருஹத்ஸம்ஹிதையிலும் ஸ்ரீ வராஹமிஹிராசாரியர் பிரஜாபதியென்றே கூறுகின்றார். சப்தகல்பத்துருமத்தில்—"ஷ்ஷ்டிஸம்வத்ஸர" என்ற பதத்தின் விவரணத்தில்—ஸ்ரீ பைரவர்கூறுவதாக--

उन्मत्तश्च जगत्सर्वं धनधान्यसमाकुलम् ।
नित्योत्सवः प्रजावृत्तिः प्रमोदे जायते प्रिये ॥
नीरोगाश्च निराबाधा मानवा विगतद्विषः ।
बहुक्षीरास्तथा गावः प्राजापत्ये वरानने ॥

என்று கூறப்படும் வசனத்தில் நிகழும் வருஷத்திற்கு பிரமோத என்றும் அடுத்த வருஷத்திற்குபிரஜாபதிஎன்றும் பெயர்கூறிப்பய

னும் கூறப்படுகிறது. ஸ்ரீதத்துவநிதியென்றதோர் நூலில்மாத்திரம் சில வருஷங்களுக்குப்பெயர்கள் மாறுதலாகப்படிக்கப்பட்டிருந்தாலும், பிரமோத, 'பிரஜாபதி' என்றும்பெயர் மூலவசனத்திலுதாஹரிக்கப்படுகிறது. அதாவது—

ज्वलत्कालानल प्रख्यो वरदाभयपाणिमान् ।
महोदरो लोहिताक्षो वत्सरस्तु प्रजापतिः ॥

என்று வருஷஸ்வரூபத்திலும்

मानाभिमानस्सुतरां दयालुः कुलानुवृत्तः किल चारुशीलः ।
देवद्विजार्चाभिरतो विनीतो मर्त्यः प्रजाधीश समुद्भवः स्यात् ॥

என்று அவ்வருஷத்திற் பிறந்தவனது குணத்தைக் கூறுவதிலும் பிரஜாபதியென்றே குறிப்பிடப்படுகிறது. "பிரஜோத்பத்தி" யென்று பெயரிஷ்டமாயிருக்குமானல் பலனேக்கூறும் வசனத்தில் "मर्त्यः प्रजोत्पत्तिसमुद्भवः स्यात्" என்று சொன்னுலும் வ்ருத்தம் பொருத்தமுடையதாகும்பொழுது அதைவிட்டு "பிரஜாபதி" என்றபொருளே விளக்கும் 'பிரஜாதீச' என்றபெயர் கூறப்பட்டது. அதுபோல் பிரகிருத வருஷத்தின் பெயரையும் பிரமோதூதவென்று ஓரிடத்திலும், 'பிரமோத' என்று மற்றோரிடத்திலும் முன்னுக்குப்பின் விரோதமாகக் கூறப்படுகிறது. அதாவது—

दक्षश्च धूर्तः परकार्यकर्ता प्रमोदजन्मा मनुजोभिमानी ।

என்று பிரமோதயென்றே எடுக்கப்படுகிறது. இவ்வளவால் வரப்போகிற வருஷத்தின்பெயர் 'பிரஜாபதி' என்றுதான் பிரமாண நூல்களில் கூறப்படுகின்றது. ஸங்கல்ப்பத்தில் ஒருவிதம். மற்றதில் வேறுவிதமென்று பிரமாணமின்றி அங்கீகரிக்க முடியாது. சிலவருஷங்களின் பெயர்கள் ஸம்ஹிதாக்கிரந்தங்களில் கூறப்படுவதற்கும் வழங்கப்பட்டு வருவதற்கும் விரோதமாகக் காணப்படுகின்றன. அதன் காரணங்களேயும் அதையொட்டின சிலதத்துவஸாரங்களேயும் வேறோர் ஸமயத்தில் விரிவாக வெளியிடுவோம். வரப்போகிற வருஷத்தின்பெயர் "பிரஜாபதி" யென்றுகொள்வதே பிரமாணங்களுக்கொத்தது. கால விஷயத்தில் சோதிடநூலே முக்கியப்பிரமாணமென்பதும் வைதிகர் அறிந்தவிஷயமே. அதையும் வேறிடத்தில் விவரிப்பாம்

சுப்பிரமணியன்,

---

# துவைத-அத்வைத-விசிஷ்டாத்வைத-மதஸ்தர்களுடைய ஸன்னிதியில் ஒருவிக்ஞாபனம்.

प्रणम्याहं परं ब्रह्म भाष्यकारान् तथा गुरून् ।
विज्ञापयामि यत्किञ्चित् क्षन्तव्यश्च मया बुधैः ।

1. ஏற்கனவே தத்வவிஷயங்களில் பிரசாரமாயிருந்த சாக்கியம் உலூக்கியம் முதலான மதங்களை நிராகரித்து வியாஸ மகரிஷி பிரம்மஸூத்திரங்களை எழுதி அதன்மூலமாய் தத்துவம் இன்னது தானென்பதை ஸ்வமதத்தால் காட்டியிருக்கிறாரென்பது மிகவும் பிரசித்தம்.

2. அதிலும் அர்த்தம் கண்டுபிடிக்கமுயன்றவர்கள் மூன்று ஆசார்யர்கள். தங்கள் தங்களுக்குத் தோன்றியிருப்பதை ஷெ பிரம்மஸூத்திரங்களுக்கு 3-விதமான அர்த்தங்களையும் அதற்குத் தகுந்த யுக்திகளையும் சாஸ்திர ஆதாரங்களையும் எழுதி 3-பாஷ்யங்களால் தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைக்காண்பிவித்திருக்கிறார்களென்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

3, இப்படிக்கிருக்கும் நிலைமையிலேயே, 3-மதத்திலுமிருக்கிறவர்கள் தங்கள் தங்கள் ஆசார்யாள் எழுதியும் உபதேசித்தும் வந்திருக்கிற மதங்களைத் தவிர்த்தும் இந்த 3-மதங்களுக்குள்ளேயே வேறுமத நிஷ்டர்களைவிலக்கி ஸம்பந்தம்முதலானதுள்பட தங்கள் மதஸ்தர்களோடேயே போஜனாதிகள் உள்படசெய்து கொண்டு,பிராம்மணர்களெல்லாரும் ஆதியில் ஒன்றாகவேயெண்ணி எழுதியிருந்த மனுஸ்மிருதி முதலான சாஸ்திரங்களைக்கூட சில விஷயங்களில் விலக்கி வேறுவிதமான ஆசாரத்தையும் மற்றெல்லாவிஷயங்களையும் நடத்திக்கொண்டிருப்பதும் தெரிந்தவிஷயமே.

4. பிராம்மண ஸமுதாயத்துக்கு தூஷணம் ஏற்பட்டுவருகிற இக்காலத்தில் 3-மதஸ்தர்களும் பரதத்வத்தில் சிலபேதம் கொண்டிருப்பது ரஹஸ்யமாகவேயிருக்கவேணுமென்றே இந்த வேதாந்த சாஸ்திரத்துக்கு வெகுவான நிர்ப்பந்தங்களுடன் ரஹஸ்யத்தில் உபதேசிக்கவேணுமென்பதை எழுதியிருப்பதுடன் ஆசார்யர்களும் நடத்தியே காண்பித்து வருகிறார்களென்பதும் நன்றாய்

விளங்க:—"அத்வைதமதம் அவைதிகம்" என்ற ஒருவிதமான வாக்கியம் கிளம்பி அதற்காகப்பல பெரிய மஹான்களுக்கும் ஸாமான்னியர்களுக்கும் ஒருவிதமான மனவருத்தமுண்டாய் வியவஹாரம் சாஸ்திரத்தில் நடப்பதாயும் பத்திரிகைகளால் கேழ்வைப்பட்டு என்னுடையமனம் வருத்தமடைகிறது.

5. பிரஸித்தமான 3-மதபாஷ்யங்களிலும் அதின் வியாக்கியானக்கிரந்தங்களிலும்ஆரம்பமுதல் மதக்கொள்கையை வெவ்வேருக ஏற்படுத்திக்கொண்டு அதற்குத் தகுந்தபடியே யுக்தி, சாஸ்திரம், ஸ்மிருதி லௌகிகதிருஷ்டாந்தங்களை எழுதி பூர்த்தியாகத் தங்கள் தங்கள் மதத்தை நிலைநிறுத்தியிருக்கிறார்களென்பது நன்ருய் விளங்க— ஒரு மதத்திலிருக்கப்பட்டவரை வேறு மதத்திலிருக்கிறவர் வாதத்தில் ஜயிக்கிறார், ஜயித்துவிட்டார், ஜயிக்கப் போகிருரென்பதும். 'தர்க்காப்ரதிஷ்டானுத்'என்கிறஸூத்திரார்த்தத்தை நன்குணர்ந்தவர் எப்படி சொல்லக்கூடுமென்பதை எல்லாரும் யோசிக்கவேணும்.

6. அப்படிக்கு ஜயமென்கிற வார்த்தையைச் சொன்னுல் தர்க்கத்தில் வாக்கியார்த்தம் சொன்ன பெரியவாளை வியாகரண வித்துவான் ஜயித்துவிட்டானென்பதுபோல் பரிஹாஸாஸ்பதமாக ஆகுமேதவிர வேறில்லை.

7. ப்ரம்மஸூத்திர பாஷ்யங்களில்கூட பரமதகண்டனபாமானஸூத்திரபாஷ்யர்எழுதுங்காலத்தில் எப்படி வியாஸபகவான் பரமதங்களைத்தூஷிக்கிறார்? சாஸ்திரவிருத்தமல்லவா என்று கேட்டுக்கொண்டு மிகவும் அனுசிதமானவைகளைச்சொல்லுகிறபடியால் அப்பேர்க்கொத்த மதங்களை விலக்கி சிஷ்யர்களிடத்தில் தயவால் தன் மதத்தை நன்ருய்த் தெரியப்படுத்துவதற்காகமாத்திரம் தூஷித்ததென்று எழுதியிருக்கிறதையும் கவனித்தால் "வாதேந ப்ராம்மணம் ஜித்வா" என்கிற ஸ்மிருதிகளையும் கவனித்தால் வேதாந்தவிஷயத்தில் வாதத்திற்கு சுருதிகளையும் ஸ்மிருதிகளையும் லௌகிகதிருஷ்டாந்தங்களையும் வெளிப்படுத்தினுல் ஸாமான்ய லௌகிகர்களுக்கும் ஸாமான்ய வித்துவான்களுக்கும் ஒருமதத்திலும் சிரத்தையில்லாமல் எங்கும் சார்வாகமதமாகவே ஆகிவிடும் என்பதும்தவிர 'நபுத்திபேதம் ஜநயேத்' என்கிற ஸ்மிருதியைமீறி நடந்ததாகவே முடியும். 'சேஷம் கோபேந பூரயேத்' என்கிற

ஸ்வரஸமான சப்தார்த்தத்துடனிருப்பதினுலும் பல உபநிஷத் வாக்யங்களும் பல ஸ்மிருதிவாக்கியங்களும் லக்ஷணையாகவும் கௌணமாகவுமே ஸ்வாஸசப்தார்த்தமன்னியில் இருப்பதாகவே காட்டியிருப்பதையும் கவனித்தாலும் ஒரு மதத்தை ஒரு மதம் தூஷிக்கமுடியாதென்பது விளங்குகிறது.

अतियजेत निजां यदि देवतामुभयतश्च्यवते जुषतेऽप्यघम् ।

என்று கருத்துள்ள வேதத்தையும் "அவரவர் இறையவர்குறைவிலரிறையவர்" என்கிற நம்மாழ்வார் பாடலையும் யோசித்தால் ஒரு மதக்காரர் இன்னொரு மதக்காரரைத் தூஷிப்பதற்கும் வியவஹாரத்துக்குக் கொண்டுவருவதற்கும் சாஸ்திரமில்லையென்பதும் நன்ருய் விளங்குகிறது.

9. பிரபுக்களோ மஹான்களோ 3-மதநிஷ்டர்களையும் அவரவர்களுடைய மதமான பாஷ்யம் அதின் வியாக்யானங்களிலும் அந்த மதஸ்தர்களோடே அவரவர்களை வாதிக்கச்சொல்லி அந்த அந்த மதங்களில் அந்தந்த பாஷ்யகாரர்கள் சொன்னபடி நன்ருய்ச் சொன்னாரவென்பதைக் கவனித்து சந்தோஷித்து சம்மானம் செய்யவேணுமேதவிர இதர மதக்காரரை இதரமதஸ்தரோடு வாதிக்கச்சொல்வது உசிதமில்லையென்பதை "ஸ்மாரயே த்வாம் ந சிக்ஷயே" என்கிறபடியே மதத்திரயத்திலிருக்கப்பட்ட வித்வான்களையும் மதத்ரயகுருக்களையும் அஞ்சலியோடு பிரார்த்திக்கிறேன்.

10. பிராம்மணர்களுக்கு மிகவும் தூஷணமேற்பட்டுவருகிற காலத்தில் இவர்களுக்குள் ஏற்கனவேயிருக்கிற ஆசாரசம்பிரதாய பேதங்களிருந்தாலும் மதவிஷயமான மனவருத்தமும் உண்டாகாமல் எல்லா பிராம்மணர்களும் ஒன்ருகவே இருக்கவேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

11. இப்படி எழுதினது ஒருகால் உசிதமில்லை என்று தோன்றினுல் மன்னிக்கும்படியாயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ வங்கீபுரம் ரங்காசாரியார்,
தானதிகாரி,
புதுக்கோட்டை.

---

## உபந்யாஸச் சுருக்கம்.

———0———

(115 பக்கத்தொடர்ச்சி)

மனிதர் காரியஜயத்திற்காக ஈசனைச் சிறிதுகாலம்பஜனம்செய்து அதால் அவர்கள் உத்தேசபலனடையாதபோது இது நாள்வரை பஜித்தும் குணம் வரவில்லை என்று மனம்நொந்து பக்தியை இகழ்ந்துபஜனத்தைநிறுத்திவிடுகிறார்கள். கர்ம்மபலதாதாவானபகவான் ஏன் இவர்களை இவ்விதம் நோவச்செய்கிறார் என்றால், ஈசஹிருதயத்தையும், தனது முன்ஜென்ம கர்மாஹஸ்யத்தையும் அறிய மனிதனுக்குச் சிறிது சக்தியில்லாதகுற்றமே காரணமாம். ஒருவன் அல்ப்ப திரவியத்தைக்கொண்டு அதிக லாபமடையவெண்ணி வியாபாரியிடம் சென்றால் அவனது திரவிய புஷ்டிக்குத்தக்க சாமான்களையே அவன்கொடுப்பான் என்பது உலகவழக்கம் அதுபோலவே அல்ப்பபக்தியைச் செய்துவிட்டு அபரிமிதமான பலனை ஈசனிடம் கேட்டால் அவர் கணக்கின்றிப் பலனை எவ்விதம் கொடுப்பார்? ஈசன் இவனது முற்ஜன்ம கர்மசேஷத்தையும் பக்திவைபவத்தையும் அறிந்து தக்கபடியாகவே கர்மபலனையளிக்கிறார். அதனால்தான் இவனது உத்தேசம் சில காலத்தில் விபரீதமாக வருகிறது. இதற்கு உதாரணமாக பாண்டவர்கள் வனத்தில் பிறந்தார்கள். பிறகு திருதராஷ்டிரர், விதுரர் இவர்களின் ஆதரவு பெற்று வித்யை பயின்றார்கள். அப்போது துரியோதனாதிகள் அசூயைகொண்டு இவர்களை விரோதிக்கவே இதை விலக்க பாண்டவர்களை 'வாரணாவத'மென்ற பட்டணத்தில் வசிக்கச்செய்தார்கள். அப்பொழுதும் அரக்குமாளிகையில் வைத்து தீக்கிரையாக்கி இவர்களைக் கொல்லமுயன்றார்கள். அதிலிருந்து ஒருவாறு கஷ்டப்பட்டு 'ஏகசக்கிரநகரம்' சென்று பிராமணவேடம் பூண்டு பிக்ஷாஹாரம் செய்து ஜீவித்துவரவே 'துருபதராஜ'கன்னிகையின் சுயம்வரத்தைக்கேட்டு அவ்விடம் சென்று அதில் ஜயம் பெற்று 'திரௌபதியை'யடைந்து ராஜ்யம் பெற்று வசித்துவரும் காலத்தில் 'காண்டவவனத்தை' அக்கினி பகவானுக்கு ஆகாரமாக அளிக்கவே அவரது சந்தோஷத்தால் திவ்ய மாளிகையொன்று வாசஸ்தானமாகப்பெற்று "ராஜசூய யாகத்தை" அதில் செய்தார்கள். இம்மாதிரியான முன்னேற்றத்தைக்கண்டு சகிக்காதவர்களான துர்யோதனாதிகள் சகுனியின்

சகாயத்தைப்பெற்று சூதாட்டத்தில் 'தர்மபுத்திராதிகளை'யும் சகல போக்கியவஸ்துக்களையும் ஜயித்துப் பாண்டவர்களை 12-வருட காலம் வனவாசம் செய்துவர நியமித்தார்கள். பிறகு வெகு குரூர யுத்தம் செய்து சத்துருஜயம் பெற்று ராஜ்ஜியசுகத்தை பகவத் கிருபையால் அடைந்து வாழ்ந்தார்கள். இது பாரதசரித்திரச் சுருக்கமாகும். இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது யாதெனில் சாஸ்திரமார்க்கம் தவறுமல் தர்மாதிகளை அநுஷ்டித்துவந்த பாண்டவர்களுக்கு மேன்மேலும் கஷ்டமே வந்துகொண்டிருந்தது. இக்கஷ்டங்களைக்கண்டு மயங்காமல் விடாமுயற்சியாய் தர்மத்தை யனுஷ்டித்துவந்ததால் பாண்டவர்கள் சாசுவதமான மேன்மை பெற்று விளங்கினுர்கள். இதனுல் நாம் செய்துவரும் காரியங்களில் சிறிது விக்கினம் வந்துகொண்டிருப்பது முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமென அறிந்துகொள்ளவேண்டும்.

சிசுக்களும் தவறி விழும்தோறும் தவறி விழாமலிருக்க முயற்சிப்பதும், பயிர்களுக்கு ஆடுமாடுகளால் சேதம்வரும்போது அதைவிலக்க முள்வேலி முதலியதுகட்டி சூட்சிப்பதும், பசி அதிகமாகும்போது அதைவிலக்க முயற்சிப்பது, அங்கத்தில் திணவு எடுக்கும்போது மற்றோர் அங்கம் அதைவிலக்க முயற்சிப்பதுடன் இயற்கையான குணமாகும். இம்மாதிரியான தடையுண்டாகாமல்போனுல் நமக்கு அஜாக்கிரதையும், சோம்பலும் கூடிக்கொண்டேவரும் என்பதில் தடையில்லை. திருட்டு இல்லாவிடத்தில் பந்தோபஸ்து செய்வது வழக்கமில்லை. பயமும். அரிஷ்டமும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்பட்டு வருகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமது முன்னேற்றமும் கூடிக்கொண்டே வரும். தர்மதபிரசாரம் அதிகமான காலத்திலேயே "ஆதிசங்கரபாதாள்" அவதாரம்செய்து ஷண்மதங்களையும், ஸ்தாபனம் செய்தார்கள். இம்மாதிரியாய் சரித்திர மகிமைவிளங்கி நிற்பதால், சட்டசபையில் சனுதனமதத்தைக்கெடுக்க எவ்வித முயற்சிகள் சாமர்த்தியமாய்ச் செய்துவந்தாலும் ஈசனருள்பெற்றமகிமைக்கு மனிதசக்தி, சாமார்த்தியங்கள் முன் நிற்கமாட்டாதென்பது சாத்தியமான விஷயம்.

நாம் ஈசனைமுன்னிருத்தி பாண்டவர்களைப்போல ஸஹனசக்தி சாந்தபுத்தி, திடபக்திகளுடனும், பரமாச்சாரிய பக்தியுடனும்,

தர்ம மார்க்கத்தையே கடைப்பிடித்து விடாமுயற்சி செய்து வரவேண்டியது என்பதுதான் முக்கியகர்ம்மம். "விடாமுயற்சி வெற்றியளிக்கும்" என்பதில் தடையில்லை.

"விசிரியைச் சுற்றச்சுற்ற" காற்றும்பெருகி அனேக மனிதர்களுக்கு அக்காற்று சுகமளிக்கும். அதைச் சுற்றுமல் வைத்திருந்தால் ஒருவருக்கும் சுகம்வரமாட்டாது. என்பதுபோல விடாமுயற்சியால் "தர்மாட்சணமாகிய" பிரசாரத்தைச்செய்துவந்தால் அதன் மகிமையாக உலகமே க்ஷேமம்பெற்றி சுகமடையுமென்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரியான துராசாரஸங்கடகாலத்தில் பகவானை பஜிக்கவேண்டியதைத்தவிர வேறு மார்க்கமில்லையென்பதும் அதனுல் அவர் அதற்குச் சகாயமாக நிற்கிருர் என்பதும் வியாஸ ஆரம்பத்தில் வரைந்துள்ள "தேவி பாகவத" சுலோகமே நம்போலுள்ளவர்களைத் திருப்திபெறச் செய்கிறது என்பது நிச்சயம்.

மதாபிமானிகளே! மயங்காதீர்கள், முன்வந்து துராசாரத்தை வெல்ல சதாசாரத்தைக் கைக்கொள்ளுங்கள் அபிப்பிராயத்தை அறிவியுங்கள். ஈசன் துணைபுரிவாராக. சுபம்.

K. V. வீரமணிவாத்யார்.

---

# கர்மவிருத்திக்ஷயரகசியம்.

பூவுலகில் அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், ஜராயுஜம் என நான்குவகை பிராணிபேதங்களும் ஏழுவகை தோற்றங்களும் உள்ளதில் "1. தேவர், 2. மனிதர், 3, விலங்குகள், 4. பறவைகள், 5. ஊர்வன (புழு, பாம்பு, நத்தை) பேதங்கள், 6 நீரில் வாழும் பிராணிகள், 7. ஸ்தாவரங்களான (செடிகொடி) விருக்ஷம் முதலியனவாம். இவைகளுள் இகபரலோகம் பாபபுண்ணியம் இவைகளை பகுத்தறியக்கூடிய மானிடசாதி உத்தமம், பரலோக புத்தியின்றி பகுத்தறிவற்று இகசுகத்தைக்கருதி ஜீவிக்கும் பசு பக்ஷி முதலியவைகள் மத்தியமம், இவ்விருவகை புத்தியற்ற மரம் செடி கொடி விருக்ஷங்கள் அதமங்களாம். இதனுல் மானிடப் பிறவி ஏழுவகையிலும் உத்தமம் என்பது சித்தம்.

இம்மனிதன் தான் பூர்வஜன்மத்தில் செய்திருக்கும் சத்கர்மம் துஷ்கர்மங்களின் பாகுபாட்டின்படியே சம்பத்து விபத்துக்களுக்கு ஹேதுவான கர்மங்களைச் செய்கிறான். இதையனுசரித்தே மானிடப்பிறவி சம்பத்து விபத்து இவைகளையனுபவிக்க சாதனமாகிறது. ஸ்வகர்மத்தால் வந்து கூடிய சுபாசுபங்களையனுபவித்தே தீரவேண்டும். சத்கர்மத்தால் லக்ஷ்மீகடாக்ஷமும் துஷ்கர்மத்தால் சாபம் தரித்திரமும் வருகிறது. ஸ்வகர்மபுஷ்டிக்குக் காரணம் யாதெனில்

कालभेदे देशभेदे पात्रभेदे च कर्मणाम् ।
न्यूनताधिक्य भावोपिभवेदेवहिकर्मणा ॥

"மனிதனின் கர்மங்கள் காலதேசபாத்திரவிசேடத்தால் குறைவு கூடுதலான சக்தியடைகிறது" என்று பிருஹஸ்பதி தேவராஜனுக்குரைத்தார்.

यथा फलन्ति सस्यानि न्यूनान्यप्यधिकानिच ।

"ஸஸ்யங்களும் தேசகாலபூமிவிசேடத்தால் குறைவுகூடுதலாக பலிக்கின்றன" என்று உறுதிசெய்தார். உதாரணமாக:— கோள தேசத்தில் ஒட்டுமாமரமான்து வளர்ந்துவந்தாலும் தக்க பலனளிப்பதில்லை. ருசியும் மிகவித்தியாசமாகிறது,காரணம் யாதெனில் மழையும் பூமியின் ஸாரமும் காலமுமாகுமென்று ஸ்தாவரசாஸ்திர நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இது அநுபவசித்தம். இதுபோலவே மனிதன் செய்துவரும் சகல கர்மங்களும் தேச காலபாத்திரபேதத்தால் விருத்தி க்ஷயங்களையடைந்து பலனளிக்கின்றன. இவ்விஷயத்தில் சாஸ்திரம் உபதேசிப்பதென்னவெனில் எந்த கர்மமும் புண்யபூமியில் செய்யவேணும். "आर्यावर्तः पुण्यभूमिः" என்றதால் ஆர்யவர்த்ததேசம் புண்ணியபூமி என சித்தமாகிறது. அதிலும் கங்காதீரம் குருக்ஷேத்திரம் பிரபாசம் நைமிசம் ஸேது முதலிய தேசங்கள் புண்ணியபூமிகள் என ரிஷிகள் கருதுகிறார்கள். இக்கருத்தைக்கொண்டே தேவ பிதிரு திருப்திக்காக ஸேதுவில் சத்கர்மாநுஷ்டானம் இன்னும் நடைபெற்றுவருகிறதும் அதன்பலன் சகலஜனசம்மதமாக பிரகாசித்து வருகிறதும் சத்தியமாம். புண்ணியதேசங்களில் சத்கர்மானுஷ்டானம் அமிதபலனளிப்பதாகவே ஆஸ்திகர்களின் அபிப்பிராயம். ராவணன் முதலியோர் தவத்தால் மகிமை பெற்றதும் இப்

புண்ணியதேசத்திலாம். இன்னும் நைமிசம் முதலிய புண்ணிய தேசங்களில் மகான்கள் தர்மவிசாரத்தால் சிரஞ்சீவிகளாய் வாழ்ந்துவருகிறார்களென்பது இந்துக்களின் விசுவாசம். இதுவே தேசமகிமையுமாம்.

காலமகிமை யாதெனில் சாமான்யகாலத்தில் கர்மானுஷ்டானம் சாமான்ய பலனும் "சந்திரசூரியகிரஹணம், அமாவாசியை, சங்கிராந்தி, வியதீபாதம்'' முதலிய புண்ணியகாலங்களில் செய்யும் கர்மாநுஷ்டானம் 100-மடங்கு அதிகம் பலனைத் தருகிறது. இதையறிந்தே மகான்கள் இப்புண்ணியகாலங்களில் சேது முத முதலிய புண்ணியதேசங்களில் காத்திருந்து தர்மாநுஷ்டானம் செய்துவருகிறார்கள். காலவிசேடத்தால் சத்கர்மங்களுக்கு மகிமை கூடுவதுபோலவே துஷ்கர்மங்களுக்கும் மகிமை அதிகமாகும். உதாரணமாக—

கிரகணகாலத்தில் ஸ்னான, தானாதிகள், செய்யாமலிருப்பவனுக்கு "தேவ பிதுரு'' சாபத்தால் கடினமான நோய் உண்டாகிறதென சாஸ்திரம் சாஸிக்கிறது. இதனால் காலமகிமையால் எந்தக்கர்மத்திற்கும் மகிமை உண்டென்பது ஸ்பஷ்டமாகிறது. இக்காரணம்பற்றியே கிரஹணகாலத்தில் "மந்திரோபதேசமும், அதைஜபிப்பதும் அதிக குணமெனக்கருதிவருகிறார்கள்'' பாத்திர விசேடம் யாதெனில், ''பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு'' என்று ஔவை உபதேசித்தாள். சத் பாத்திரதானம் அநந்த பலனும், அசத்பாத்திரதானம் ஆபத்துமாகும். உதாரணம்:—

பசியால் வருந்திய ஓர் செம்படவன் சிஷ்டபிராமணனைச் சந்தித்து, தன்பசிதீர்க்க யாசித்தான். அவ்வேதியன் ஓர் சிறு நாணயமொன்றைக் கொடுத்தான். அதைப்பெற்ற செம்படவன் இது நமது பசி தீர்க்கப்போதாது என்னசெய்வதென ஆலோஜித்து, அத்தனத்தால் மீன்பிடிக்கக்கூடிய முள்முதலிய ஸாமான்களை வாங்கி' மீன் பிடித்து தன் பசியைத் தீர்த்துக்கொண்டு மீதியைவிற்று தனம் சம்பாதித்தான்' இவ்விதமாக தினம் நடத்திவரவே காலக்கிரமத்திலவன் மிக தனிகனானான்- ஒருக்கால் நமது சிரேயஸ்ஸுக்குக் காரணம் யாதெனச்சிந்தித்தான், பிராமணனின் சிறுதனமெனவறிந்து ஸந்தோஷத்தால் பிராமணனை உபசரிக்கக் கருதி, சில தனங்களைக்கொண்டு பிராமணனின் சமீபம்சென்று

தனது வரவையும் வரலாற்றையும் தெரிவித்து தனத்தையும் கொடுத்தான். இதைக்கேட்ட பிராமணன் நடுநடுங்கி அனியாய மாக பாத்திரமறியாமல் அபாத்திரத்தில் தானம்செய்து கோடிக் கணக்கான "ஜீவஹானிக்கு" பணம்கொடுத்து உதவிசெய்தேனே வெகுநாள்களாகச் செய்துவந்த "பிராணி ஹிம்சையின்" பாபத் தில் அறியாமல் பங்குகொண்டேனே என மிக நொந்து பாப பரிஹாரமாக தீர்த்தயாத்திரை போனூர் என்றும், பசுவதைசெய்து மாமிசம் விற்று ஜீவிப்பவனொருவன் பசுவை விலைக்குவாங்கிக் கொண்டு போகும்போது பசிதாகசிரமத்தால் ஓர் பிராமண னிடம் சென்று தன் பசிப்பிணியைத் தீர்க்கவேண்டினன். மறையோன்மனமிறங்கி, அவனுக்குசிறிது ஆகாரமும், பசுவுக்குச் சிறிது புல்லும் கொடுத்து உதவினன். இவனது உபகா ரத்தால் தைரியமடைந்த வியாபாரி தன் தொழி லைச்செய்து முடித்தான். இப்பாபகர்மத்துக்கு சிறிது அன்ன ஆகாரம்கொடுத்து உதவினதினல் அவனது பாபத்தில் சிறிது இவனைப்பற்றிக்கொண்டது. அதனுல் "யமராஜ" சிட்சை யும் சிறிதுபெற்றுன் என்றும் தர்மாகசியம் வெளியாவதால் "பாத்திரமறிந்துபிச்சையிட" வேண்டியது மிகவும்முக்கியமாகும்.

வதம்செய்ய ஆயுதமின்றி தவிப்பவனுக்கு கத்தியைக் கொடுப்பதும், ஆத்மஹத்திசெய்துகொள்பவனுக்கு ஆஹாரமளிப் பதும், அதர்மமாய் பாபத்தை விலைக்கு வாங்குவதாகும். அபாத் திர தானத்தால் பாபத்தில் பங்கு அறியாமலே (லாட்டரிசீட்டு) பிரைஸ்போல்வந்து கூடுவதால் இந்த தத்துவத்தைச்சிறுவசனத் தால் ஔவை உபதேசித்தாள். இவ்விதம் தேசம், காலம், பாத் திரம் இவைகளை நன்கறிந்து மிக சாக்கிறதையாய் தர்மானுஷ்டா னம் செய்யவேண்டுமென்று நியமம் பிறந்திருக்கிறது. அதிக லாபத்தைக்கருதினவன் தகுந்த சமயத்தில் வியாபாரம் கொள் முதல் செய்வதுபோல புண்ணியலாபத்திற்காக காலதேசாதிகளை எதிர்பார்த்து கர்மானுஷ்டானம் செய்துவரவேண்டும்.

புண்ணிய லாபத்தால் கர்ம்ம சேஷம் நசித்துஞானம்பெற்று மனிதன் நித்தியசுகம்பெறுகிறுன்.

यथा दाने तथा स्नाने जपे न्य पुण्यकर्मसु ।
एवं सर्वत्र बोद्धव्यं नराणां कर्मणां फलम् ॥

மனிதன் செய்துவரும் ஸ்னுன, தான. ஜப, ஹோமாதிகளான கர்மங்களின் பலன்கள் தேசகாலாதிகளுக்கு உள்பட்டவைகளெனறு "பிருஹஸ்பதி" உபதேசித்தார். இம்மாதிரியான சாஸ்திர ஸாரங்களை நன்கறிந்து சிரத்தா, பக்தி, விசுவாசத்துடன் தர்மானுஷ்டானம்செய்து மேன்மைபெற்று ஜீவிக்க ஈசன் கிருபை செய்வாராக. சுபம்.

சங்கரராமசர்மா.

---

## சம்பத்தை இலட்சிமியாகக்கருதுவது ஸநாதனதர்மம்.

निरस्तपादपे देशे ऐरण्डोपि द्रुमायते ।

"மரமில்லாத ஊரில் ஆமணக்குச்செடியும் விருட்சமாகிறது" என்றார். இப்பழமொழிக்கொத்து சிற்சில விடங்களில் புதிதாய் சபை கூட்டவேண்டுமென்ற எண்ணம் சிலருக்குத் தோன்றிவருகிறது. ஆனல் சபை எதற்காக? அதன் பயன் யாது? அதை நடத்தத்தக்கமனிதர்யார்? அச்சபையை இரட்சித்து வருவருபவர்யார்? அதன் உத்தம நோக்கமென்ன? இவைகளைச் சிறிதும் கவனியாமல் தனம், சரீரபுஷ்டி, நிரீசுவரவாதம், நாகரீகநடை, தடபுடல்வாக்கு, இவைகள் பொருந்தியவர்களையே மிக மகிமையுள்ளவர்களென எண்ணி இவர்களின் அத்யெட்சத்தில் (முன்னிலையில்) "அசாஸ்திர துராசாரத்தையே நாகரீக சீர்திருத்தமென உறுதிசெய்து பத்திரிகைகளில் பிரசாரம் செய்தும் வருகிறார்கள். பத்திரிகைகளோ, வேதம், ஸ்மிருதி புராணம், தெய்வம், பிராம்மணன் இவர்களை நிந்தித்த வியாஸம் கிடைக்கவேணுமென்று தவித்து நிற்கின்றன. தர்மப்பிரசாரபத்திரிகையோ மிக அல்பம். இருந்தாலும் தர்மபாரத்தைத்தாங்க பூர்ணசக்தியில்லாமல் ஒதுங்கிப்பிழைக்கிறது. இதன் காரணமாக துராசாராதிகள் எங்கும் பிரகாசித்துவரவும், சதாசாரம் பதுங்கிப் பிழைத்துவரவும் நேரிடுகிறது. சனுதன மதாபிமானிகளும், தர்மதத்துவத்தைத்தினசரி பத்திரிகையில் தினமும் மாறுதலாகப் பார்த்துவருவதாலும், யதார்த்த தர்ம தத்துவம் அம்மாதிரியான பத்திரிகையில் காணுததாலும், துராசார சீர்திருத்தத்தைச் சிறிது ஆதரித்தே பேசி

விடுகிறார்கள். இவைகளுக்கு முக்கியகாரணம் தர்ம்மமார்க்கப் பிரசாரத்திற்கு தினசரிபத்திரிகை ஒன்று இல்லாததேயாம் என் பது அநேக தடவையாக உண்மையாகும்.

தெய்வம் ஒன்று உண்டென்பது எம்மதஸ்தர்களும் சம்ம தித்த விஷயம். மதபேதத்தால் தெய்வத்துக்கு ரூபபேதமும் நாமபேதமும் கல்ப்பிக்கிறார்களேயன்றி வேறில்லை. சிலர் விக்கிர கம், சிலர் மதக்கிரந்தம், சிலர் அக்னி, சிலர் சூரியன், இவைக ளையே தெய்வமென பாவிக்கிறார்கள் "நவீன நாகரீகப்பிசாசு" பிறந்த இடத்திலும் மதக்ரந்தமும், மதாசாரியன், அவனது பத்னி, அவரது அடையாளம், இவைகளைத்தெய்வமென போற்றி வருவது உண்மை. இஃதிவ் விதமிருக்க "நவீன நாகரீக பிசாச பிடித்த" ஹிந்துக்களுக்கு இந்துமத ஆசாரப்படி க்ஷேத்திர தரிச னம், தீர்த்தஸ்னானம், பூஜை இவைகள் பிடிக்காமல் போகவும் ஆசரிக்கிறவர்களை மூடக்கொள்கையென கண்டிக்கவும், புத்தி சாமார்த்தியம் ஒருமதத்திலும் இல்லாமல் எங்கிருந்துவந்து கூடி யிருக்கிறதோ அறியோம். இந்து மதத்தில் "தனத்தை லட்சுமி என்றும், "புத்தகத்தை சரஸ்வதி" என்றும் பாவிப்பது வழக்க மாகவிருக்க அதை மூடக்கொள்கை என்பவர்களின் கொள்கை மூடக்கொள்கை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை, இந்து மத சாஸ்திரத்தில் "வைகுண்டலோகத்தில் இலட்சுமி" எனதிருநாமம் பூண்டு பகவத் பத்னியாய் விளங்கும் தேவியே இந்திரலோகத் தில் "சுவர்க்க இலட்சுமி" என்றும் ராஜ்ஜியத்தில் "ராஜ்ஜிய இலட்சுமி" என்றும் க்ஷத்திரியனிடத்தில் "தைரிய இலட்சுமி" என்றும் கிருகத்தில் "கிருக இலட்சுமி" என்றும் உலகிலுள்ள சகல சிருஷ்டி பதார்த்தங்களிலும் இலட்சுமிதேவி வசிக்கிறாள் என்றும் அடையாளமாக இலட்சுமி வாசமற்ற வஸ்து அருவருப் புள்ளதும், இலட்சுமிவாசமுள்ள வஸ்து அழகுள்ளதுமாகுமென "தேவிபாகவதம்" கூறுகிறது. இது போலவே அட்சரவடிவங் களால் அலங்கரிக்கப்பட்ட புத்தகத்தில் "சரஸ்வதிதேவி" நித்திய வாசம் செய்கிறாள் என்றும், அடையாளமாக புத்தகம் காலில் பட்டுவிட்டால் அப்பொழுதே அதைத்தொட்டு கண்ணில் வைத்துக்கொண்டு பரிதாபப்படுவதும் ஆஸ்திகர்களின் வழக்கமா கிறது. இம்மாதிரியான சாஸ்திரஸாரங்களை மூடக்கொள்கை யென்று ஒருவாக்கில் சொல்லிவிட்டால் இவர்களின்கொள்கைக்கு

மதிப்புளங்கனமுண்டாகும். மனிதன்க்ஷேமம்பெறவேண்டுவானுல் அதற்கு அழிவில்லாத தெய்வமொன்றே திட்டமாக இருந்தே தீரவேண்டும். தெய்வம் இல்லாவிடில் க்ஷேமமுமில்லை. எது போலென்றால் அரிசிமுதலிய தான்யத்தைமாவாக்கவேணுமானுல் திரிகை கல்வேண்டும். அதில் அடிக்கல்ஸ்திரமாகவும் மேல்மூடிசுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டும், ஆனுல்தான் தானியம் பொடியாகும். அதன்றி திரிகையின் இரண்டுகல்லும் சேர்ந்து சுற்றுவதானுல் அது உபயோகமற்றதாகும். திரிகையின் திடமான அடிக்கல்லானது ஈசனைப்போலவும், அதன்நடுமுளை ஈசனது வாசஸ்தானமாகவுமாகும். அந்த நடுமுளையை அண்டியிருந்த தானியம் பொடியாகாததுபோல ஈசனடியை அண்டினவன் ஆபத்தை அடையமாட்டானெனவும் அறியத்தக்கது.

தனுதிசம்பத்தை லக்ஷ்மியென பாவிப்பது சனுதனதர்மாஹசியமென்பதை அடியில் சரித்திரச் சுருக்கத்தால் நன்கு அறியலாம். அதாவது ஒருகால் தேவராஜன் மத்தியபானத்தால் மதிமயங்கி அப்ஸரஸ்திரீயுடன் வனத்தில் குலாவிவரவே 'துர்வாஸமகருஷி' அவ்வழியாக அனேக சீடர்களுடன் வைகுண்டநாதனை தரிசித்துவிட்டு கைலாசநாதனைத் தரிசிக்கச்செல்லவே ரிஷியைக் கண்ட தேவராஜன் வணக்கமாயுபசரித்தான். அதனுல் சந்தோஷமடைந்த ருஷி வைகுண்டநாதனின் பாரிஜாதமலர்மாலைப்பிரசாதத்தை அனுக்கிரஹத்துடன் இந்திரனுக்குக் கொடுக்கவே அதை அவன் வாங்கி சிறிதும் மகிமையாக எண்ணுமல் 'ஐராவதத்தின் சிரசில்' வைத்தான். இதைக்கண்ட துர்வாசர் அடே! உனது க்ஷேமத்தைக்கருதி கொடுத்த பகவத்பிரசாதத்தை 'தனமதத்தால்' என்முன்னிலையிலேயே ஸாரமற்றதாகவெண்ணி அகங்காரத்தைக் காண்பித்ததால் உனது மதத்திற்குக் காரணமான ராஜ்ய சம்பத்து நசித்துப்போகட்டுமெனச் சபித்தார். இதன்காரணமாக "சுவர்க்கலக்ஷ்மியாய் விளங்கிவந்த லக்ஷ்மிதேவி" நமது பர்த்தாவை அவமானித்தவனிடம் சிறிதும் தங்கக்கூடாதெனக் கருதி வைகுண்டபதியை அடைந்தாள். அதுமுதல் தேவராஜ்ஜியம் சோபை குன்றி தேவர்கள் தீனர்களாய் சோபையற்று தயங்கினுர்கள். அஸுரர்களும் ஹிம்சித்தார்கள். இம்மாதிரியான வித்யாஸகாரணத்தையறிந்த பிருகஸ்பதிபகவான் இந்திரனுடனும், பிரும்மாதிதேவர்களுடனும் வைகுண்டம் சென்று பகவானைத் துதித்து வேண்டினுர்.

அப்போது பகவான் இந்திரனுக்கு லக்ஷ்மிகடாக்ஷம் திரும்ப வரவேண்டுமானல் க்ஷீரசமுத்திரத்தைக் கடையவேண்டும். அதி லிருந்து லக்ஷ்மி உண்டாய் அவளது அநுக்கிரகத்தால் இந்திரன் முன்போல் மகிமைபெறுவான். ஆகையால் க்ஷீரசாகரமதனம் செய்ப முயற்சியுங்கள் என்று அனுக்கிரகித்து அனுப்பினர். அவ் விதமே தேவாசுரர்கள் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தார்கள். அதிலிருந்து லக்ஷ்மி தோன்றி பகவானை மாலையிட்டு இந்திரனுக்கு பூர்ணாநுக்ரஹம் செய்தாள். அதுமுதற்கொண்டு இந்திரனும் தேவர்களும் மகிமையுடன் வாழ்ந்துவந்தார்கள். தேவராஜனும் சுவர்க்கலக்ஷ்மியை தனசமிருத்திக்காக தினமும் வைபவத்துடன் பூஜித்துவந்தான் என்ற புராணசரிதம் புகழ்பெற்றுநிற்கும்போது நவீன மேதாவிகளின் உபதேசமொழிகள் அறியாமையின் அளவு கோல் என்பதில் என்ன தடை? இந்திரனும் லக்ஷ்மியை பூசித்த பிறகுதான் குணமடைந்தான் என்றதால் சம்பத்தை லக்ஷ்மி தேவி எனப்பாவித்து உபசரித்துவருவது சனாதனஇந்துக்களின் முக்கிய கொள்கையாம். நாகரீகப்பேய் பிடித்தவர்களின் சொற் கேட்டு தனலக்ஷ்மியைத் தள்ளாதீர்கள்.

நேயர்களே! இந்திரனைவிட மகிமைபெற்றவனும் சிபாரிசு பலமுள்ளவனும் வேறு யாருமில்லை. தேவராஜன் பிரும்மாவின் பௌத்திரனின் புத்திரன், விஷ்ணுபக்தன், பிருகஸ்பதிக்குசிடன், தக்ஷனின் தௌஹித்திரன், மகிமைபெற்ற அதிதியின் புத்திரன் மகாதவமஹிமையுள்ள காச்யபருஷியின் புதல்வன். 33கோடி தேவர்களுக்கும் நாயகன், இவ்வளவு மகிமை பொருந்தினவனே லக்ஷ்மியைஆராதித்து சம்பன்னனானன் என்றால்சம்பத்தைலக்ஷ்மி எனக்கருதி பூஜிப்பதில் என்ன தடை வந்தது. சாஸ்திரமார்க்கம் தவறிநடந்தால் நம்போலுள்ளவர்களும் கஷ்டநஷ்டத்தாலவதிப் படுவது நிச்சயம். இச்சரித்திரமே இதற்கு சாக்ஷியாகும். ஆசார நிஷ்டையிலிருப்பவர்களை பிசாசு அணுகாது, ஆசாரமற்றவர்களை பிசாசு ஒருகாலும் விட்டுவிலகாது. பிசாசை நம்பி க்ஷேமம் பெற் றவனில்லை. தர்மத்தை நம்பி க்ஷேமம் பெற்றவர்கள் கோடிக் கணக்காவார்கள். 'தர்மம் தலைகாக்கும்' அதை நம்பி நடக்க நாராயணன் நற்புத்தியளிப்பாராக. சுபம்' சங்கரராமசர்மா,

கொட்டாரக்கரை.

# பெரியோருக்கு விண்ணப்பம்.

ஆரியர்களே! குருவென்றும் சீடனென்றும் பெரியோரென்றும், சிறியோரென்றும், மேலோரென்றும், கீழோரென்றும், மேன்மையென்றும், தாழ்மையென்றும், புண்ணியமென்றும், பாபமென்றும், சுகமென்றும், துக்கமென்றும், பகலென்றும், இரவென்றும், இன்னும் பல பல விதங்களில் இரட்டையாயும் அவைகள் ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவைகளாயுமே சிருஷ்டிக்கப்பட்ட இந்த துவிதப் பிரபஞ்சத்தில் ஐம்புலன்களுக்கெட்டுபவைகளெல்லாம் இவ்விதமே இருக்கின்றன. இவைகளை ஒன்று சேர்ப்பதென்பது யாவராலும் முடியாதது தான். இதையே தான் பிரபஞ்சமென்போம். ஆனல் இவைகளிலொன்று விரும்பத்தக்கதாயும் மற்றொன்று வெறுக்கத்தக்கதாயும் இருப்பதையும் நாம் ஒப்புக்கொள்வோம். ஆனல் வெறுக்கத்தக்கதை விரும்புகிற ஜந்துக்களுமுண்டு. அவை மனிதர்கள் தேவர்கள் முதல் அல்ப ஜந்துக்கள்வரை இருக்கின்றன. அதில் விருப்பமுள்ளவர்கள் நன்மையை விரும்புகிறவர்களை வெறுப்பார்கள். உதாரணமாய் புண்ணியகன்மாவையும் தயாதாக்ஷிண்யம் முதலியவைகளையும் விரும்புகின்ற தேவர்களை அஸுரர்கள் அரக்கர்களென்போர் வெறுப்பார்கள். இதுபோல் மனிதர்களிலும் உண்டு நாமவர்களை அஸுரகுணமுள்ளவர்களென்போம். இவர்களுக்குள் ஒற்றுமை எவ்வாறு எற்படும், ஆனல்ஸமாதானபேததண்டங்களால்ஒருஸமயமேற்படலாம். அதுவும் நிரந்தரமாய் இருக்கமுடியாது. அவ்விதம் நிரந்தரமாய் இருக்கச்செய்யவேண்டுமானல் அத்தகைய ராக்ஷஸகுணமுள்ளவர்களுக்கு நான்காவது உபாயத்தால் உண்டு பண்ணுவதுதான் பலமாய் நிற்கும். உதாரணமாய் மிகக்கொடிய குணத்தோடு ஸமஸ்த ரிஷிகளுக்கும் எப்போதும் நடுக்கத்தையே கொடுத்துக்கொண்டிருந்த மாரீசனுக்கு ஸ்ரீ ராமர்கொடுத்த நான்காவது உபாயத்தால் நடுங்கித்தனது அரக்ககுணங்களை அறவே ஒழித்து தபஸ்வி வேஷத்துடன் தவம்புரியலானன். அவனுள்ளளவும் ரா என்ற சப்தத்தைக் கேட்டாலே நடுங்கிக்கொண்டிருந்தான். இதை உபதேசமென்றும் உபதேசக்கிரமம், அதிகாரிகளுக்குத் தக்கவாறு என்றும் பெரியோர்கள் கூறுவர்.

(தொடரும்) M. N. சுப்பிரமணியசாஸ்திரி

# வார விருத்தாந்தம்.

கருணை பெரிது. தேசியவிஷயமாக ஒருவரைக்கொன்றதாக ஸந்தேஹித்து எதிர்வாதம் புரியாமல் உயிரைத் திருணமாக நினைத்த வீரபுருஷர்களான பகவத்சிங், குருராஜ், சுகதேவர்என்ற மூவர் 23உ இரவு தூக்கிடப்பட்டனர். ரர்ஜிப்பேச்சால் கொஞ்சம் குறைந்த கோலாஹலம் மறுபடியும் பன்மடங்காகக் கிளம்பும். பல லக்ஷம்பேர் ஒன்றுசேர்ந்து ஜீவகாருண்யநிமித்தம் தூக்கிடாமல் சிறைதண்டனையாக மாற்றும்படி வேண்டினர். இச்சமயத்தில் தூக்கிலிட்டது எல்லாவகையாலும் அநுசிதமே, தங்கள் கௌரவம் குறையக்கூடாதென டில்லிசபையில் அரசாங்க த்வனி கிளம்பியது. கௌரவம் பெரிதா காருண்யம் பெரிதா என அது உணரவில்லை. வீரசிங்கங்கள் 35 கோடி பாரதர் கருணைக்கும் பாத்ரமாகி வீரஸ்வர்க்கம் பெறுவர்.

* * * *

தெரியாமலா சொன்னார்? ஆமதாபாத்தில் ஓர் வைத்யர் வைத்யத்தொழிலிலீடுபட்ட ஓர் ஸ்திரீயை பிரஸவவைத்யம் பார்க்கவர வேண்டுமெனக் கூறி இரவில் அழைத்துச்சென்று துர்மார்க்கத்திற்காரம்பித்தாராம். அவர் ஸெஷன்ஸுக்கு கமிட் செய்யப்பட்டார். பொதுவாக ஆண்கள் செய்யுமுத்யோகங்களுக்காசைப்பட்டுவரும் பெண்கள் புருஷரது காமச்செயலுக்கு இடங்கொடுக்கும்படி தனக்கிஷ்டமில்லாமலே அவகாசமளிக்க நேருகிறது. ஆதலின் குலஸ்திரீகளுக்கு பரபுருஷஸம்பாஷணம் உத்யோகம் முதலியவை கூடாதென தர்மசாஸ்திரக்காரர் கூறினர். புருஷர் குற்றத்திற்கேற்ற சிக்ஷை பெறுவாராக. மாதர்கள் வீட்டு உத்யோகத்தையே விரும்புக.

* * * *

3. எங்கும் சுயநலம். எந்த ஸபைகூடினாலும் உத்யோகம் கௌரவம் வேண்டுமென்றே தீர்மானிக்கிறது. பேச்சோ தேசோபகாரம் பரோபகாரம் என வானைப்பிளக்கிறது. யாதவர்மஹாநாடு 25உ மன்னார்குடியில் கூடிற்று. கோஸம்ரக்ஷணம், அது மேய அவகாசம் வேண்டும், ஆகாரத்திற்காகவும் பசுவைக்கொல்லக் கூடாது என்பதுபோன்ற முக்கியமான அம்சங்களை வற்புறுத்

தாது விட்டு சட்டசபையில் யாதவரை நியமிக்கவேண்டும் எனத் தீர்மானித்தது. ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.

* * * *

இறந்தும் இரட்டிப்புத்துன்பம். தனநஷ்டத்திற்காகவோ மான நஷ்டத்திற்காகவோ, நோய் பொறுக்க முடியாமலோ, சிலர் தற்கொலைபுரிந்துகொள்கின்றனர். தற்கொலைஎன்பது சரீரத்திலிருந்து உயிரைவிடுவதுஒன்று. ஜீவனைப்பயன்படுத்திக்கொள்ளாம (வேதாந்தமார்க்கத்தில் பிரவேசிக்காம) லிருத்தல் ஒன்று. இரண்டிற்கும் பலம் இருள் சூழ்ந்த நரகமே. இறந்தும் இந்த நரகம்வருவதோடு பிராரப்தத்தால்தோன்றியபிணியையும் நஷ்டத்தையும், அடுத்தபிறவியிலாவது அனுபவிக்கத்தான் வேண்டும். இறந்தவர்களுக்கு இவ்வுபதேசம் பயன்படா. இருந்தும் இறந்தவர் போலுள்ளோர் நல்வழி வர பிரார்த்தனை. சென்றவாரம் சென்னையில் ஓர் மாதும் திருச்சியில் ஓர் கண்ட்ராக்டரும் தற்கொலை புரிந்துகொண்டனர்.

* * * *

பலத்த கிளர்ச்சி வேண்டும். ஸ்ரீயுத காசிகிருஷ்ணமாசாரியார் என்ற பெரியார் வைதிகர் சார்பாக ஸ்ரீயுத காந்திக்கு "அவரவர்களுக்கும் மதத்தில் பூர்ண சுதந்திரம் வேண்டும். வரும் மஹா ஸபையில் எல்லோரையும் அழைத்து ஓர் ஸம்விதானம் செய்ய வேண்டு"மென தந்திகொடுத்தார். மன்னார்குடி பிராமணஸபையிலும் இந்த பிரஸ்தாபம் நடந்தது. ஆனால் இதெல்லாம் ஸமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமே. பல ஊர்களில் கூட்டங்கூடி பத்திரிகையில் பிரசுரித்து பலர் ஒன்று கூடி அங்கு சென்று ராஜப்ரதிநிதியோ காந்தியோ நம்மை கவனிக்கத் தக்க நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இன்னும் போதிய ஊக்கம் பலருள்ளத்தில் உதிக்கவில்லை, கனதனவான்கள் கண்ணில் இவ்விஷயம் படுவதில்லை.

* * * *

உத்தேசமில்லையாம். 25உ பார்லிமெண்டில் ஒருவர் கேட்க சாரதாசட்ட அமுலை நிறுத்திவைக்க உத்தேசமில்லைஎன இந்தியா மந்திரி பதில் கூறினர். தற்சமயம் அதிக பாதையில்லையேயென்று நாம் பேசாமலிருக்கலாகாது. அச்சட்டத்தையகற்ற அல்லது மாற்றத்தக்க முயற்சி செய்யவேண்டும்.

வேலியே பயிரை மேய்கிறது. சிந்தாமணியில் அக்ரஹாரவழி யாக நாடார் என்போர் உத்ஸவம் நடத்தக்கருதி பல வீடுகள் கொளுத்தப்பட்டு பலர் காயமடைந்து சிலர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஸம்ப்ரதாயமாக நாடார் அங்குவருவதில்லை. ஆதலால் இவ்வழி ஊர்வலம் செல்லலாகாதென ஆதித்ராவிடர் உள்பட எல்லோரும் எதிர்த்தும் வியாஜ்யம் கோர்டில் முடிவாகாமலிருக்கும்போதும் அதிகாரிகள் அவ்வழி ஊர்வலம் செல்லாமல் தக்கபடி சுடாமல் கல்லெறியும் கூட்டத்தைக் கலைத்திருக்க வேண்டும். ஜனங்கள் ஒருவர்க்கொருவர் வெட்டிமடியாமல் காக்கும் காவலரே சுட்டுக்கொன்ருல் தைவந்தான் சரணம். கான்பூரில் அதிகாரிகள் அச்ரத்தையால்தான் ஹிந்து மகம்மதியசண்டை பலத்ததாக வடநாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன. கோவில் கொளுத்தப்படுகிறது. குழந்தைகள் வெட்டப்படுகின்றன. ஸ்திரீகளது ஸ்தநம் அருக்கப்படுகிறது. கஷ்டம் என் சொல்வது?

* * * *

இதுவா ஸ்வராஜ்யம்? தனக்குச் சொந்தமான ராஜ்யம் ஸ்வராஜ்யமாகும். தற்சமயம் தேசியஸபை கோறிக்கிடைக்கும்ஆளுகையால் அது ஸித்திக்காது, ஏன்? தலைவரது உள்ளம் உடல் செயல் இவைகளை அன்யரே ஆளுகின்றனர். நம் தேசியவழியில் ஆசாரவழக்க ஒழுக்கம் தலைவரிடம் புகுந்தாலன்றிஅது ஸ்வராஜ்யமாகா. 45-வது தேசிய ஸபை வரவேற்பு ஸபைத்தலைவரான ஜ்யோதிராமும் ஸபைத்தலைவர் வல்லபபாய்படேலும் தீண்டாமையகன்ருல் தான்ஸ்வராஜ்யம் சித்திக்கும் என்ற பழங்கதையை மறவாமல் கூறுகின்றனர்.

* * * *

மருந்தே மாய்க்குமானுல் பிறர் ஆக்ஷியென பெறும்பிணி அகல ஸத்யாக்ரஹம் முதலிய மருந்து காணப்பட்டது. இவ்வழியில் புகுந்தோரது செயல் நம் தேசத்தையே அழித்துவிடும் வகையில் செல்வதைக்கண்டு மனம்நோகிறது. கட்டுக்கடங்காத காளைகளாகி பெற்ரேருக்கும் மற்ரேருக்கும் பணியாத லப சிறுவர்கள் ராஜிய தந்திரத்தில் விதுரரெனத்தகும் மாளவ்யாவை பேசவிடாமல் தங்கள் தலைவரான சுபாஷ்போசுக்கும் அடங்காமலிருந்த காராச்சிக் காக்ஷி வருங்கால விபரீதத்தைக் காட்டுகிறது. சிறுவர்களைக்கிள

ப்பி விடுவது சுலபம். அடக்குவது கஷ்டம். தக்கபுத்தி கூறி சிறுவர்களை அடக்கி தேசியஸதாசாரத்தை நிலைநிறுத்தாவிடில் தேசம் பாழாகும்.

* * * *

தைவபக்தியுமில்லை. திருப்பருங்குன்றமென்ற சுப்ரமண்ய க்ஷேத்திரத்தில் ஆலயத்தில் தேசியத்தொண்டருக்கு விருந்து நடந்தது. கோயில் சுத்தமான ஸ்தலம். அசுத்தமானவர் ஆலயம் செல்லலாகாது. ஜாதிவர்ணபேதமின்றி ஆலயத்தில் சென்று எச்சில் செய்து வயிற்றை நிரைப்புவதுவா தேசீயம்? கர்மாவைத் தான் கைவிட்டனர், பக்தியுமில்லையே.

* * * *

காமாதுரனுக்கு லஜ்ஜையேது? திருநெல்வேலியில் கிருஷ்ணபுரம் வெங்கட்டாரமய்யர் முதலிய மூவர் ஓர் யாதவவிவாஹமான ஸ்திரீயை பலாத்காரமாய் மோட்டாரில் தூக்கிச்சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. கலிராஜன் நாக்கையும் புல்லிங்கத்தையும் கையால் பிடித்துக்கொண்டு களித்து ஆடினனும். அதேபோல் இச்சமயம் வர்ஜாவர்ஜமின்றி கண்டவிடத்தில் உண்பதும் லஜ்ஜையின்றி துர்மார்க்ககார்யம் பலர் கூடி செய்யவுந் துணிந்துவிட்டனர். கல்வியும் ஸஹவாஸமும் நல்லதாயிருத்தல் வேண்டும்.

ஸ்ரீவத்ஸ. வே. சோமதேவ சர்மா

---

நாகப்பட்டணம் ஹிந்துமதாபிமான ஸங்கத்தினுதவில் அத்வைத ஸபாபண்டிதர் சாஸ்திர ரத்னகாம் திருவையார் ப்ரம்ம ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் அவர்களால் சட்டநாதஸ்வாமி ஆலயத்தில் 31—3—31, 1—4—31, 2—4—31, தேதிகளில் மாலை 7 மணிக்குமுறையே ஸம்ஸ்காரங்கள் பக்தி, ஆத்மஞானம் இவ்விஷயங்கள் உபன்னியசிக்கப்படும். என்று தெரியவருகிறது.

R. நடராஜன்.

---